01.07.2026

அ.வ.எண். 114/2024

வா.சா.1 – திருமதி.மரகதம் க/பெ. அப்பாசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 01.07.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எங்களுடைய பூமியும், சிவகாமி வகையறா பூமியும் வீசன பகுதியாக இருந்ததால் என்றால் சரிதான். முன்பு அவ்வாறு இருந்தது. தற்போது சரி செய்துள்ளோம். எங்களுடைய பாகம் சற்று மேடான பகுதி என்றும், பிரதிவாதிகளின் சொத்து சற்று தாழ்வான இடத்தில் உள்ளது என்றால் இல்லை. ஒரே மாதிரியாக தான் உள்ளது. எங்களுடைய சொத்து சற்று மேடான பகுதி என்றும், PAP வாய்க்கால் வழியாக மேலே தண்ணீர் பாயாது என்றால் சரியல்ல, தண்ணீர் பாய்கிறது.

2. அவ்வாறு தண்ணீர் வராததால் என்னுடைய தம்பி சிவகாமி பூமியை ஒட்டி வாய்க்கால் ஏற்படுத்தினார் என்றால் இல்லை, பாரம்பரியமான வாய்க்காலில் தண்ணீர் பாய்கிறது. புது வாய்க்கால் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். பழைய வாய்க்காலில் பிரதிவாதி தண்ணீர் பாய்ந்தவுடன் அதை அழித்து விடுவார், நாங்கள் மீண்டும் வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்சுவோம். பிரதிவாதி எப்போது வாய்க்காலை அடைத்தார் என்ற தேதி தெரியுமா என்றால் தெரியாது.

3. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, PAP வாய்க்காலில் இருந்து 4 – 5 தண்ணீர் வந்தது என்றால் சரியல்ல, 2 வருடத்திற்கு ஒரு முறை நீர் வந்துள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நீர் வந்ததா என்றால் ஆமாம். எனது வழக்குரையில், பிரதிவாதி சட்டத்தை மீறி பைப் லைன் அமைத்துள்ளார் என்றும், எந்தெந்த காலைகளில் பைப் லைன் அமைத்தார் என்றால் காலை எண் தெரியாது. பைப் லைன் யாருடைய பூமியில் செல்கிறது என சொல்கிறேன் என்றால் வெங்கடாசல கவுண்டர் பூமி வழியாக செல்கிறது.

4. எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் வெங்கடாசல கவுண்டர் பூமி வழியாக பைப் லைன் செல்வதாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பைப் லைன் எத்தனை காலை வழியாக, எவ்வளவு நீளத்திற்கு செல்கிறது என்றால் தெரியாது. அவ்வாறு பைப் லைன் போடவில்லை என்றும், அதனால் தான் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொல்ல தெரியவில்லை. PAP வாய்க்காலை எந்த தனிநபரும் சீர்படுத்த இயலாது என்றும், அதை அரசு தான் சீர்படுத்த முடியும் என்றால் PAP வாய்க்காலில் இருந்து எங்களது பூமிக்கு வரும் வாய்க்காலை அழித்து விடுகின்றனர், அதை நாங்கள் சீர்படுத்தி வருகிறோம். PAP வாய்க்காலை அழித்து விடுகின்றனர் என விவசாய பாசன சங்கதிடமோ, தாசில்தாரிடமோ, பொதுப்பணித்துறையிடமோ அல்லது தனிப்பட்ட முறையில் புகார் அளித்தேனா என்றால் ஆமாம்.

5. அவ்வாறு நான் புகார் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு நான் கொடுத்திருந்தால் அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் புகார் கொடுத்துள்ளேன். நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பொது வண்டித்தடம் எந்த காலையில் உள்ளது என்றால் தெரியாது. பொது வண்டித்தடம் எத்தனை நபர்களுக்கு பாத்தியம் என்றால் அவ்வாறு ஒரு பொது வண்டித்தடமே இல்லை. பொது வண்டித்தடம் என்பதை காட்டுவதற்கான பட்டா, சிட்டா ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி PAP வாய்க்காலை அடைத்தார் என நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. PAP வாய்க்காலை அடைத்தால் அது சம்மந்தமாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் எல்லா இடங்களிலும் புகார் கொடுத்து எதுவும் நடக்கவில்லை, அதனால் நீதிமன்றத்திற்கு வந்தேன். நீதிமன்றத்திற்கு முன்பு எந்தெந்த அலுவலகத்திற்கு சென்று புகார் அளித்தேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், காவல் நிலையத்திற்கும் புகார் கொடுத்தேன்.

7. தாசில்தார் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்றால் சிவகாமிக்கு உரிமை இல்லை என்றும், எனக்கும், எனது தம்பிக்கும் உரிமை உள்ளதாக சொன்னார். வட்டாட்சியரின் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு உத்தரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வட்டாட்சியர் கொடுத்த புகாரும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் ஏற்பட்டதாக சொல்லும் ஒப்பந்தத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. ஒரே பரிகாரத்திற்காக நான் ஒரு வழக்கும், எனது சகோதரர் அகத்தீஸ்வரன் ஒரு வழக்கும் தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சொத்தில் உரிமை உள்ளது. வெங்கடாசல கவுண்டர் பூமி இன்று வரை பாகம் பிரிக்காமல் உள்ளது என்றால் சரிதான். நான் ஒரு வழக்கும், எனது சகோதரர் அகத்தீஸ்வரன் ஒரு வழக்கும் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் முடியாது என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமை உள்ளது. பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டி தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கில் முகாந்திரம் மற்றும் மூல காரணம் இல்லாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur